மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத்துறை யோசனைப்படி உயர் நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்து இதுபோல் பழைய உறுப்பினர்களை நீக்கிவிட்டு புதியதாக முறைப்படி நியமனம் செய்தால் அது ஏற்றுக்கொள்ளப்படுமா என்று ஆராய்ந்து ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் நீதிமன்றத்தில் மனு கொடுக்கப்பட்டு அதற்கான உரிமை பெறப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களை பறிமுதல் செய்யும் சட்டம்.

*1691. திரு. ஆலவயல் சுப்பையா :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெல் கடத்தப் பயன்படுத்தப்படும் வாகனங்களைப் பறிமுதல் செய்ய அரசு சட்டம் கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கள்ளக்கடத்தலில் ஈடுபடுகின்ற வாகனங்களைப் பறிமுதல் செய்வதற்கு 1955 ஆம் ஆண்டு இன்றியமையா சட்டத்தின்கீழ் வழியும், வகையும் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆலவயல் சுப்பையா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக மிக அவசியமான நெல் போன்ற உணவுப் பொருளை சில முதலாளிகள் வெளி மாநிலங்களுக்கு அரசு அனுமதி இல்லாமல் கடத்திச்சென்று அதிக விலைக்கு விற்க பயன்படுத்தப்படும் வாகனங்களைப் பறிமுதல் செய்ய அரசு கடுமையான சட்டம் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 1955 ஆம் ஆண்டு இன்றியமையாச் சட்டம் இருக்கின்ற காரணத்தினாலே புதியதோர் சட்டம் கொண்டு வருவதற்கான அவசியமும், தேவையும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆலவயல் சுப்பையா : துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் சென்ற ஆண்டு நெல் கடத்தப்பட்ட வாகனங்கள் எண்ணிக்கை எத்தனை என்பதையும் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[1990 சனவரி 20]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, அது தொடர்பான சரியான விவரங்களைப் பெற்றிட தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. பாலையா : துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து அண்டை மாநிலமான கேரளாத்திற்கு நெல் அரிசி ஆகியவற்றைக் கடத்திச் செல்வதைத் தடுப்பதற்காக செக் போஸ்டுகள் போடப்பட்டிருந்தன. அவற்றில், சமீபத்தில் ஏழு செக் போஸ்டுகள் அகற்றப்பட்டு இருக்கின்றன, அப்படி அகற்றப்படுவதன் காரணத்தினால் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து நெல், அரிசி ஆகியவற்றைக் கேரள மாநிலத்திற்கு கடத்திச் செல்வதற்கு வழிவகை ஏற்படுகிறது. எடுக்கப்பட்ட செக்போஸ்டுகளை மீண்டும் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ? அதோடு ஏழு செக் போஸ்டுகள் எடுக்கப்பட்டதன் காரணத்தினாலே ஏராளமான நீண்ட கால அரசு ஊழியர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்களே, அவர்களுக்கு என்ன நடவடிக்கை எடுக்க அரசு திட்டமிட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, இதுவும், மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத விவரங்களைச் சொல்கிறார். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் அரசால் பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் உள்ள ஏழை கூலி விவசாயிகள் அருகில் உள்ள அம்பாசமுத்திரம் பகுதிக்குச் சென்று அறுவடை செய்துவிட்டு, கூலி நெல்லை கொண்டு வரும்போது மிகவும் கெடுபிடியாக அதிகாரிகள் வண்டிகளை நிறுத்திப் பிடிக்கிறார்கள். ஆனால் லாரி லாரியாக கடத்துகிறவர்களைக் கூட விட்டுவிடுகிறார்கள். இந்த ஏழை விவசாயிகள் கொண்டு வருகின்ற நெல்லை நிறுத்தாமல் கொண்டு வருவதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்குமா ? சொந்த உபயோகத்திற்காக அவர்கள் கொண்டு வருவதை அரசு அனுமதிக்குமா என்பதை நான் கேட்டுக் கொள்கிறேன்.

9–50 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கூலி நெல்லை எடுத்துச் செல்பவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக்கூடாதென அரசு அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அத்தோடு, உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல, லாரி லாரியாக கடத்துபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசிற்கு அடையாளம் காட்டினால் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, சென்ற ஆண்டில் மத்திய அரசாங்கத்தினுடைய உணவுத் துறை அமைச்சர் தமிழ்நாட்டிற்கு வந்திருந்தபோது கடத்தல் வாகனங்கள் கைப்பற்றப்பட்டன, தமிழ்நாட்டிலே யிருந்து பிற மாநிலங்களுக்கு நெல்லோ, அரிசியோ கொண்டு போகின்ற கடத்தல் வாகனங்கள் கைப்பற்றப்பட்டன என்று பதிலளிக்கப்பட்டது இந்த அரசாங்கத்தின் சார்பிலே. எனவே, அந்த விவரங்கள் அரசினுடைய கையில் இருக்கும் என்ற காரணத் திற்காக அப்படி எத்தனை வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன. எத்தனை வாகனங்கள் கையகப்படுத்தப்பட்டன என்கின்ற விவ ரத்தை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த ‘கையகப் படுத்துவதிலே’ சட்டப்படி சில வேறுபாடுகள் இருக்கின்றன. ‘சீஷர்’ என்பது ஆரம்பத்திலே வாகனங்களைக் கையகப்படுத்து வது, நடவடிக்கைகளுக்குப் பின்னாலே பறிமுதல் செய்வது, ‘கான்பிஸ்கேஷன்’. அதற்கு இடைப்பட்ட நேரத்தில் நீதி மன்றத்திற்குச் செல்வதற்கும், அதுபோன்று அரசாங்கத்திற்கு மேல்முறையீடு செய்வதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமை இருக்கிறது, அதன் மூலம் வாகனங்கள் திரும்பப் பெறுவதற்கும் சட்டப்படியான வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வாய்ப்பு களைப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்டவர்கள் வாகனங்களைத் திரும்பப் பெறுவதற்கும் வழிவகை இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி மொத்தம் எத்தனை வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன என் பதற்கான விவரம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்கு மட்டும் விவரமான பதில் அறிவிக்கப்படும்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் கடத்தப்பட்ட லாரி களுக்கு எத்தனை அரசு அதிகாரிகள் உடந்தையாக இருந் திருக்கிறார்கள்? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்கின்ற புள்ளிவிவரம் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எத்தனை பேர் அதிலே அரசு அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள், அவர்கள் மீது நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்கின்ற விவரத்தைக் கேட் டார்கள். அரசு அதிகாரிகள் கடத்தலிலே ஈடுபட்டு இருப்பார் களேயானால் உறுதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். எத்தனை பேர் என்கின்ற விவரத்திற்கு மட்டும் தனியாக கேள்வி போட்டால் பதில் தெரிவிக்கப்படும்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1990 சனவரி 20]

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட எல்லைகளிலே அமைக்கப் பட்டிருக்கின்ற தணிக்கைச் சாவடிகளில் இரவு நேரங்களில் அங்கே இருக்கின்ற அலுவலர்களுடைய உதவியோடு நெல் கடத்தப்படு வதாக பரவலாக தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. இன்னும் ஒரு சில இடங்களில் நெல் கடத்தப்படும்போது அவற்றைத் துரத்திச் சென்று பிடிக்கச் செல்கின்ற அலுவலர்களைத் தாக்கு வதும், ஜீப்புகளைக் கவிழ்த்துவிட்டு ஓடிவிடுவதும் வாடிக்கையாக இருக்கிறது என்றும் செய்தித் தாள்களிலே பார்க்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்காக பறக்கும் படை போன்ற ஒரு அமைப்பை ஏற்படுத்துவதற்கும் பிடிக்கச்செல்கின்ற அலுவலர்களுக்குப் பாதுகாப்புத் தருவதற்கும் அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் ஏற்கெனவே பறக்கும் படை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆங்காங்கு சோதனைச் சாவடிகளில் விரட்டிச் செல்கின்றபோது ஒரு சில தவறுகள் நேர்ந்து இருக்கலாம். அதுபற்றிய விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குத் தெரிவித்தால் அந்தக் குறிப்பிட்டவர்கள் மீதும் குறிப்பிட்ட சம்பவங்களைத் தொடர்ந் தும் நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒண்டிப்புதூர் கடலை எண்ணெய் உற்பத்தி ஆலை.

*வினா 4098 திரு. கே. ரமணி:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை சிந்தாமணி சிறப்பங்காடிக்குச் சொந்தமான ஒண்டிப்புதூரில் உள்ள கடலை எண்ணெய் உற்பத்தியாலை சரிவர செயல்படாமலிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோவை சிந்தாமணி சூப்பர் மார்க் கெட்டிற்குச் சொந்தமான ஒண்டிப்புதூரில் ஒரு எண்ணெய் ஆலை இருக்கிறது. அந்த எண்ணெய் ஆலை பருத்தி விதையின் மூலமாகவும், சூரியகாந்தி விதையின் மூலமாகவும் எண்ணெய் எடுத்து விற்பனை செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒன்று. ஆனால் அது முழுத் திறனுக்கேற்ப இப்போது இயங்காத சூழ்நிலையில் இருந்து கொண்டிருக் கிறது. அப்படி முழுத் திறனுக்கேற்ப இயக்கப்படாமல்